IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUR

MCOP 76/2023

Deposition of PW1 witness of Plaintiff/Petitioner/Defendant/Respondent solemnly affirmed by Bench Clerk in OP Section of this court in accordance with the provisions of Oaths Act 1969 (Act 44 of 1969) on 08.08.2025

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | ராமன் | **Caste** | : | |
| **S/o.** | : | மாரிமுத்து | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**முதல் விசாரணை தொடர்ச்சி :–**

பின்வரும் ஆவணங்களை என் தரப்பு சான்று ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்

| S.No. | Date | Documents | Remarks |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | 19.01.2018 | குற்ற எண். 23/2023 முதல்தகவல் அறிக்ை | புகைப்படநகல் |
| ம.சா.ஆ.2 | 22.01.2023 | டிஸ்சார்ஜ் சம்ரி | அசல் |
| ம.சா.ஆ.3 | – | பஸ்ஸின் பதிவு சான்றிதழ் | புகைப்படநகல் |
| ம.சா.ஆ.4 | – | பஸ்ஸின் காப்பீட்டு சான்றிதழ் | புகைப்படநகல் |
| ம.சா.ஆ.5 | – | மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை | புகைப்படநகல் |
| ம.சா.ஆ.6 | – | மைனர் தரண்யாஸ்ரீயின் ஆதார் அட்டை | புகைப்படநகல் |
| ம.சா.ஆ.7 | – | மனுதாரரின் ஆதார் அட்டை | புகைப்படநகல் |
| ம.சா.ஆ.8 | – | மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகம் | புகைப்படநகல் |
| ம.சா.ஆ.9 | – | விபத்து வாகனத்தின் ஓட்டுனர் உரிமம் | புகைப்படநகல் |
| ம.சா.ஆ.10 | – | எஸ்.கே.எஸ். மருததுவமனையின் விபத்து பதிவேட்டு நகல் | புகைப்படநகல் |
| ம.சா.ஆ.11 | – | எஸ்.கே.எஸ். மருததுவமனையில் வழங்கிய காயச்சான்றிதழ் | புகைப்படநகல் |
| ம.சா.ஆ.12 | – | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை | புகைப்படநகல் |
| ம.சா.ஆ.13 | – | மருத்துவ பில்கள் | அசல் |

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து சமயத்தில் எனது குழந்தை 3ம் வகுப்பு படித்து கொண்டிருந்தார். தற்போது அவர் 6ம் வகுப்பு படித்துக்கொண்டுள்ளார். விபத்து மெயின்ரோட்டில் நடந்தது. என் குழந்தை மீது மோதிய வாகனம் எது என்றால் பஸ். பள்ளியில் இருந்து வந்து இறங்கி ரோட்டை கடக்கும் போது மேற்படிவிபத்து நடந்தது

என்றால் சரிதான். விபத்து நடைபெற்றபோது என் மனைவி ரோட்டின் ஒருபுறமும் எனது குழந்தையும் பள்ளி பேருந்தும் ரோட்டின் எதிர்புறம் இருந்தார்கள் என்றால் சரிதான். எதிர்திசையில் இருந்து எனது மகள் ரோட்டை கடக்கும் போதுதான் விபத்து நடந்தது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் 3 வயது குழந்தையை கையை பிடித்து எனது மனைவி ரோட்டை கடக்காததால்தான் விபத்து நடைபெற்றது என்றால் எப்போதும் எனது குழந்தை பள்ளி வண்டியில் இருந்து ஆயாம்மா எனது குழந்தையை இறக்கிவிட்டு சாலையை கடக்கும் வரை பார்த்துவிட்டுதான் செல்வார் அன்றைய ஆயாம்மா வராததால் சாலையை கடந்ததாக நினைத்து ஓட்டுநர் விபத்தை ஏற்படுத்திவிட்டார். வழக்கிற்காக அன்றைய தினம் ஆயாம்மா பள்ளி வாகனத்தில் இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. விபத்துக்கு முழு அஜாக்ரதையும் எங்களுடையதாக உள்ளதால் விபத்தில் நஷ்டஈடு எங்களுக்கு உரிய பங்கை கழித்து கொள்ளவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. விபத்துக்கு பின்னிட்டு SKS மருத்துவமனையில் சிகிச்சை முடிந்து வெளியேற்றப்பட்ட பிறகு தொடர் சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்குக்காக மருத்துவ பில்களை அதிகப்படுத்தி தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு அதிகம் என்றால் சரியல்ல. விபத்து 1ம் எதிர்மனுதாரரின் அஜாக்ரதையால் நடக்காததால் 2ம் எதிர்மனுதாரர் நஷ்டஈடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ ஆவணங்கள் சோதனைக்கு உட்பட்டது என்றால் சரியல்ல.

ஒம்/-ராமன்

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/- R.சரவணபாபு,
சார்பு நீதிபதி,
மேட்டூர்.